15.02.2017

தினமணி

## நீலகிரியில் உருளைக்கிழங்கு பயிரிட ஆர்வம் காட்டாத விவசாயிகள்: 500 டன் விதைக் கிழங்குகள் சேதம்



நீலகிரி மாவட்டத்தில் கடும் வறட்சியால் உருளைக்கிழங்கு பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டாமல் உள்ளனர். இதனால் மேட்டுப்பாளையம் உருளைக்கிழங்கு மார்க்கெட்டில், விதைக் கிழங்குகள் விற்பனை ஆகாமல் தேக்கமடைந்ததுள்ளன.

இதுகுறித்து மேட்டுப்பாளையம் உருளைக்கிழங்கு வர்த்தக சபைத் துணைத் தலைவர் எம்என்ஜி கோபால் கூறியதாவது:

நீலகிரி மாவட்டத்தில் விளையும் உருளைக்கிழங்கு, முட்டைகோஸ், கேரட், பீட்ரூட், முள்ளங்கி, பூண்டு உள்ளிட்ட மலை காய்கறிகளின் முக்கிய விற்பனை மையமாக மேட்டுப்பாளையம் உள்ளது.

இங்குள்ள உருளைக்கிழங்கு மண்டிகளில் நீலகிரி மாவட்ட கிழங்குகள் மட்டுமின்றி, கர்நாடகம், ஆந்திரம், குஜராத் ஆகிய மாநிலங்களிருந்தும் கிழங்குகள் விற்பனைக்கு வருகின்றன. நீலகிரியில் இரு சீசனில் பயிராகும் உருளைக்கிழங்குகள் விற்பனைக்காக மேட்டுப்பாளையம் கொண்டு வரப்படுகின்றன.

ஜூன் மாத சீசனுக்காக நீலகிரி விவசாயிகள் பிப்ரவரி மாதம் முதலே உருளைக்கிழங்கு பயிரிடுவது வழக்கம். இதற்காக மேட்டுப்பாளையத்திலுள்ள தனியார் மண்டி வியாபாரிகள் விதை கிழங்கை வரவழைத்து, நீலகிரி விவசாயிகளுக்கென விற்பனைக்கு தயாராக வைத்திருப்பார்கள். ஆனால் நடப்பு ஆண்டில் பருவமழை பொய்த்து போனதால் நீலகிரி மாவட்ட பகுதிகளில் கடும் வறட்சி நிலவி வருகிறது.

இதனால் உருளைக்கிழங்கு பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டாமல் உள்ளனர்.

இந்நிலையில், மேட்டுப்பாளையம் கிழங்கு மண்டிகளில், நீலகிரி விவசாயிகளுக்காக வாங்கி இருப்பு வைத்திருந்த விதைக் கிழங்குகள் விற்பனை ஆகாமல் தேக்கமடைந்தன. 500 டன்னுக்கும் அதிகமாக இருப்பு வைத்திருந்த விதைக் கிழங்கு அழுகி முற்றிலும் சேதமடைந்தன. இதனால் நீலகிரி விவசாயிகளும், வியாபாரிகளும் பெரும் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர் என்றார்.

விவசாயிகள் கவலை: கர்நாடகம், குஜராத், ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் தற்போது உருளைக்கிழங்கு விளைச்சல் அதிகரித்து உள்ளதால், மேட்டுப்பாளையம் கிழங்கு மார்க்கெட்டில், வெளி மாநில கிழங்குகளின் வரத்து அதிகரித்துள்ளது. இதன் காரணமாக, நீலகிரி கிழங்கு

விலையும் குறைந்துள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

மேட்டுப்பாளையம் கிழங்கு மார்க்கெட்டில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஏல விவரம்: நீலகிரி கிழங்கு 45 கிலோ கொண்ட மூட்டை ரூ. 700-900 வரையும், குஜராத் கிழங்கு மூட்டை ரூ. 500-550 வரையும், கோலார் கிழங்கு மூட்டை ரூ. 550-700 வரையும், இந்தூர் கிழங்கு மூட்டை ரூ. 500-600 வரையிலும் விற்பனையாகின.

பயறு வகைகளை சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு வேண்டுகோள்

ராமநாதபுரம் மாவட்டத்தில் பயறு வகைகளை சாகுபடி செய்யுமாறு விவசாயிகளுக்கு மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் என்.அரிவாசகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

ஆண்டு தோறும் சராசரியாக ராமநாதபுரம் மாவட்டத்தில் 827 மி.மீ. மழையும்,வடகிழக்குப் பருவமழையாக 501 மி.மீ. மழையும் பொழிகிறது. ஆனால், நடப்பாண்டில் 348.6 மீ.மீ.மழையும், வடகிழக்குப் பருவமழை மூலம் குறைந்த அளவு மழையாக 173.8 மி.மீ.மழையும் பெய்துள்ளது. சம்பா பருவத்தில் இதுவரை நெல் 1.21 லட்சம் ஹெக்டேரிலும், சிறுதானியங்கள் 5,587 ஹெக்டேரிலும்,பயறு வகைகள் 4,121 ஹெக்டேரிலும்,எண்ணெய் வித்துக்கள் 4,207 ஹெக்டேரிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. போதிய மழை இல்லாததாலும்

வடகிழக்குப் பருவமழை பொய்த்ததாலும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பொருட்டு பாசன வசதி உள்ள இடங்களில் குறைந்த நீரை பயன்படுத்தி குறுகிய காலத்தில் அறுவடை செய்து மகசூல் பெறும் வகையில் பயறு வகைகளை சாகுபடி செய்து அனைத்து வட்டார விவசாயிகளும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். பயறு வகைப் பயிர்களில் உளுந்து மற்றும் பாசிப்பயறு சாகுபடி செய்யலாம். 60 முதல் 65 நாள்களில் மகசூல் தரக்கூடிய ரகங்கள் ஆன உளுந்து வம்பன்-5 அல்லது வம்பன்-6, பாசிப்பயறு-கோ-7 அல்லது கோ-8 ஆகிய ரகங்களை தேர்வு செய்து சாகுபடி செய்து பயன் பெறலாம்.

வறட்சி மற்றும் பூச்சி தாக்குதலை தாங்கி வளரும் பொருட்டு விதை நேர்த்தி செய்து சாகுபடி செய்ய அனைத்து விவசாயிகளும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ரசாயன மருந்துகள் அல்லது உயிர் காரணிகள் மற்றும் பூஞ்சாண மருந்துகளை கொண்டும் விதைகளை நேர்த்தி செய்யலாம்.சம்பா பருவத்தில் பயறு விதைகள் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு நீர்ப்பாசன் வசதி உள்ள இடங்களில் விதை உற்பத்தி செய்ய விதைப்பண்ணை அமைக்குமாறும் அனைத்து விதை உற்பத்தியாளர்களையும் கேட்டுக் கொள்வதாகவும் இணை இயக்குநர் என்.அரிவாசன் தெரிவித்துள்ளார்.